# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,156 — 1960 ජූලි 8 වැනි සිකුරාදා — 8.7.1960**

12,156 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 561 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | 562 |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

**1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளச்சபைச் சட்டம்**
**6 (2) ம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்**

இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட கட்டளை 1943 ம் ஆண்டின் 40 ம் இல. சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட 1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளச்சபைச்சட்டத்தின் 6 (1) ம் பிரிவின் பிரகாரம் என்னால் ஆக்கப்பட்டுள்ளதென்று, அச்சட்டத்தின் 6 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது. இக்கட்டளை 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1 ந் தினத்தன்று நடைமுறைக்கு வரும்.

(ஒப்பம்) பி. எச். அலுவிஹார,
தொழில், கைத்தொழில், மீன்பிடித்தொழில் மந்திரி.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 1 ந் உ.

அட்டவணை

**கட்டளை**

1941 ம் ஆண்டின் 27 ம் இல : சம்பளச்சபைச் சட்டத்தின் II ம் பாகத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தொழில்களுக்குப் பொருந்தும் :

மெத்தைத்தும்பு, சிலிர்த்ததும்பு ஏற்றுமதித் தொழில், அதாவது—

(i) உற்பத்திசெய்த மெத்தைத்தும்பையும், சிலிர்த்த தும்பையும் பண்டகசாலையில் ஏற்றுக்கொள்ளுதல் ;

(ii) ஏற்றுமதிக்காக மெத்தைத்தும்பையும், சிலிர்த்த தும்பையும் பதப்படுத்துதலும், கட்டுதலுமாகிய முறை ;

(iii) கப்பலில் அனுப்பும்பொருட்டு மெத்தைத்தும்பையும், சிலிர்த்த தும்பையும் ஏற்றியனுப்புதல்.

பின்வருவனவும் இவற்றிற்குட்படும்

(அ) பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள வேலையாளரின் வேலை—

(1) தும்பை லொறிகளிலிருந்து அல்லது வண்டிகளிலிருந்து பண்டகசாலையில் ஏற்றுக்கொள்ளுதல் ;

(2) (மெத்தைத்தும்பு) (Ballots) சுமைகளையும், (சிலிர்த்ததும்பு) கட்டுகளையும் கணக்கிடல் ;

(3) சுமைகளையும், கட்டுகளையும் நிறுத்தல் ;

(4) தும்பைத் தரம்பிரித்தல் ;

(5) சுமைகளையும், கட்டுகளையும் குவித்தல் ;

(6) சுமைக்குவியல்களையும், கட்டுக்குவியல்களையும் குலைத்தல் ;

(7) சுமைகளையும், கட்டுகளையும், அவிழ்த்தல் ;

(8) தேவையற்ற பொருள்களை அகற்றலும், தும்பைச் சுத்தஞ் செய்தலும் ;

(9) குலைந்த தும்பைக் கட்டாக்குதல் ;

(10) குலைந்த தும்பைக் காயவைத்தல் ;

(11) சுமைகளையும் கட்டுகளையும் பண்டகசாலையில் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்துக்கு எடுத்துச்செல்லல் ;

(12) சிலிர்த்த தும்பைக் கையாற் சிக்குவாங்குதலும் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதலும்) புரிகளாகக் கட்டுதலும் ;

(13) சாயமூட்டுதற்குத் தயார்செய்யும் பொருட்டு புரிகளாகக் கட்டாது, கையால் சிக்குவாங்குதல் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதல்) ;

(14) சாயமூட்டிய சிலிர்த்த தும்பைக் கையாற் சிக்குவாங்குதலும் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதலும்) புரிகளாகக்கட்டுதலும் ;

(15) வெட்டிய சிலிர்த்த தும்புப்புரிகளைச் சீர்ப்படுத்துதல் ;

(16) கட்டிய சிலிர்த்த தும்புக்கட்டுகளை வெட்டுதல் ;

(17) தும்பைத் தரைமட்டத்திலிருந்து அமுக்கும் மேடைக்கு (உயர்ந்த மட்டத்திலிருப்பின்) எறிதல் ;

(18) சுத்தஞ்செய்யும் இயந்திரங்களுக்குத் தும்பூட்டுதல் ;

(19) சுமைகளாக்கும் பெட்டிகளில் தும்பையிட்டுச் சுமைகளாக்குதல் ;

(20) கயிற்றுப்புரியிலிருந்து கயிறுதிரித்தல் ;

(21) கெந்தகத்தால் தும்பின் நிறம் நீக்கல் ;

(22) தும்புக்குச் சாயமூட்டல் ;

(23) சுத்தஞ்செய்த சிலிர்த்த தும்புப்பிடிகளைக் குறிப்பிட்ட நீளத்திற்கு வெட்டுதல் ;

(24) அமுக்கும் இயந்திரத்தால் அல்லது அமுக்கும் இயந்திரமின்றித் தும்பைப் பெட்டிகளில் அடைத்துச் சிப்பங்களாக்குதல் ;

(25) அமுக்கியை (Press) கட்டுப்படுத்தலும், இயக்குதலும் ;

(26) சிப்பத்தை இரும்பு வளையத்தால் அல்லது கயிற்றால் கட்டுதல் ;

(27) சிப்பங்களைக் குவித்தல், குலைத்தல், எடுத்துச்செல்லுதல், தள்ளுதல், ஏற்றுதல், இறக்குதல் ;

(28) தும்பைத் திரித்தலும் முறுக்குதலும் ;

(29) சுமைகளையும், கட்டுகளையும் அமுக்கிக்கு எடுத்துச்செல்லுதல் ;

(30) அமுக்கிப் பெட்டியில் அடைப்போருக்குத் தும்பைச்செலுத்துதல் ;

(31) தும்பு அமுக்கிய பெட்டிகளைத் தள்ளுதற்குத் தள்ளு பொறிகளை இயக்குதல் ;

(32) மூங்கில்களை அரிதலும் பிளத்தலும் ;

(33) இரும்புவளையம் வெட்டுதல் ;

(34) தும்புக்கயிற்றை நீட்டுதல் ;

(35) தும்பை (பெட்டிகளில்) அடைத்தலிலும் பதப்படுத்துதலிலும், உபயோகிக்கப்படும் சில்லறைப் பொருள்களை ஏற்றுக்கொள்ளுதல், கணக்கிடல், நிறுத்தல், குவித்தல், அகற்றுதல், வெட்டுதல், தயாரித்தல் ;

(36) அமுக்கி, மேடை, குழி, சுற்றுப்புறம் ஆகியவற்றைப் பெருக்குதலும், சுத்தஞ்செய்தலும் ;

(37) சிப்பங்களைச் சாக்கால் மூடித்தைத்தல் ;

(38) சுமைகளைக் காகிதத்தால் அல்லது சாக்கால் சுற்றுதல் ;

(39) மூடைகளைக் கப்பலில் ஏற்றியனுப்புதற்காக அடையாளமிடுதல் ;

(40) கப்பலில் ஏற்றியனுப்புதற்காக மூடைகளையெடுத்துச்செல்லல் ;

(41) உணவும், தேனீரும் தயாரித்தலும், விநியோகித்தலும் ;

(42) ஒரு கண்காணியின் வேலை ;

(43) சிக்குவாங்குதற்கு எண்ணெய் விநியோகித்தல் ;

(44) பண்டகசாலையையும், கான்களையும் பெருக்குதல் ;

(45) கயிற்றுத் தூசியையும், குப்பையையும் அகற்றுதல் ;

(46) கயிற்றுத் தூசியை அரித்தல் ;

(47) கயிற்றுத் தூசியையும், குப்பையையும் பைகளில் இடுதல் ;

(ஆ) (அ) பந்தியில் குறிக்கப்பட்டுள்ள வேலைசம்பந்தமாக அல்லது அவ்வேலையின்போது நடைபெறும் செய்கை யாதாயினும் பின்வரும் வேலையாளரின் வேலை இதற்கு உட்பட்டதன்று :—

(1) லிகிதர், பண்டகசாலைப் பொறுப்பாளர், நேரக்குறிப்பாளர், சரிபிழை பார்ப்போர், ஓவசியர்மார், காவலாளிகள்.

(2) 1945 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் தேதி வெளிவந்த 9,481 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமாகிய கட்டளையிற் குறிக்கப்பட்ட மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலிலுள்ள வேலையாளர்.

(3) 1949 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ந் தேதி வெளிவந்த 10,054 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமாகியதும், பின்னர் மாற்றியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்ட கட்டடத்தொழிலிலுள்ள வேலையாளர்.

(4) 1944 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ந் தேதி வெளிவந்த 9,224 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமாகியதும், பின்னர் மாற்றியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்ட இயந்திரத்தொழிலிலுள்ள வேலையாளர்.

---

### சம்பளச்சபைச் சட்டம்

1943 ம் ஆண்டின் 40 ம் இல. சம்பளச்சபை (திருத்த)ச் சட்டத்தாலும், 1953 ம் ஆண்டின் 5 ம் இல. சம்பளச்சபை (திருத்த)ச் சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்ட 1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளச்சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில், கைத்தொழில், மீன்பிடித்தொழில் மந்திரி பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டின் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

(i) கறுவாத்தொழிற் சம்பளச்சபையில் நியமன அங்கத்தவராக இருந்த திரு. டி. வேலாரத்ன தாமாக விலகியதால், அவருக்குப் பதிலாக திருமதி சில்வியா பொர்ணுந்தோ.

(ii) கறுவாத்தொழிற் சம்பளச்சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த திரு. எச். டி. அபெயகுணவர்த்தன மேற்கூறிய சட்டத்தின் 12 (2) ம் பிரிவின்படி தமது அங்கத்துவத்திலிருந்து தாமாக விலகிவிட்டதாகக் கருதப்பட்டமையால், அவருக்குப் பதிலாக திரு. கே. ஜி. சி. அபெயசூரியா.

(iii) கறுவாத் தொழிற் சம்பளச்சபையில் தொழிலாளரின் பிரதிநிதியாக இருந்த டக்டர் டபிள்யூ. டி. டி. சில்வா மேற்கூறிய சட்டத்தின் 12 (2) ம் பிரிவின்படி தமது அங்கத்துவத்திலிருந்து தாமாக விலகிவிட்டதாகக் கருதப்பட்டமையால், அவருக்குப் பதிலாக திரு. எச். சி. வெடிவர்தன.

சா. ப. குமாரசிங்க,
தொழில், கைத்தொழில், மீன்பிடித்தொழில் மந்திரி காரியாலய பதில் நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1960 ம் ஸ்ரீ ஜூலை மீ 1 ந உ.

---

### சம்பளச்சபைச் சட்டம்

1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளச்சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், பீடி உற்பத்தித் தொழிற் சம்பளச்சபையில் 1959 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு அங்கம்வகித்தற்கு, பின்வரும் பேர்வழிகளை, கனம் தொழில், கைத்தொழில், மீன்பிடித்தொழில் மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டுச் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சா. ப. குமாரசிங்க,
தொழில், கைத்தொழில், மீன்பிடித்தொழில் மந்திரி காரியாலய பதில் நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1960 ம் ஸ்ரீ ஜூலை மீ 1 ந் தேதி.

**நியமன அங்கத்தவர்கள்**

1. திரு. எஸ். ஏ. விஜயத்திலக
2. திரு. எஸ். பி. யட்டவரை
3. திருமதி சில்வியா பொர்ணுந்தோ

**முதலாளிகளின் பிரதிநிதிகள்**

1. திரு. றி. நீதிராஜா
2. திரு. எம். எச். பியசேன
3. திரு. சரத் பி. கருணநாயக
4. திரு. ஈ. டி. சேதிரிஸ்
5. திரு. என். சகலசூரிய
6. திரு. எம். பி. சைமன்

**தொழிலாளரின் பிரதிநிதிகள்**

1. திரு. என். சண்முகதாசன்
2. திரு. சிசில் டி சில்வா
3. திரு. கே. எம். அன்வர் ஷா
4. திரு. எஸ். பி. அந்தோனி
5. திரு. எம். பி. விக்ரமசிங்க
6. திரு. எச். ஏ. ஜயத்துங்க

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை வி. 62. நெல்லு

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வவுனியா மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) பரமானந்தம் செல்வரத்தினம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு மே மாதம் 30 ம் திகதியைக் கொண்ட 11,327 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வி. 46 இலக்கமுள்ள எனது விலைக்கட்டளையை உடனே இன்றுதுவக்கம் எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் 96 சேர் கொண்ட நெல்லுமூட்டைகளின் ஆகக்கூடிய மொத்தவிலையாக அவ்வட்டவணையில் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் விற்கும் மொத்தவிலையாகவே கருதப்படும்.

(3) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் 3 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் ஒரு சேர் நெல்லின் சில்லறை விலையாக அவ்வட்டவணையில் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் விற்கும் சில்லறை விலையாகவே கருதப்படும்.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக —

(அ) நெல்லின் எத்தொகையாவது திருப்பி விற்பனை செய்தற்கு விற்றல் மொத்த விலையாகவே கருதப்படும் என்றும் ;

(ஆ) நெல்லின் எத்தொகையாவது பாவிப்பதற்கு விற்றல் சில்லறை விலை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் நெல்லின் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு இடங்களிலும் எவ்விடத்திலாவது தம்வசத்திலோ அல்லது தமது கட்டுப்பாட்டிலோ மேற்படி பொருளை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமான இடத்தில் தொங்கவிடவேண்டுமென்பதை ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் நெல்லின் விலை விதிக்கப்பட்டுள்ள எந்த இடத்திலும் இப்பொருட்களை மொத்த விலைக்கோ அல்லது சில்லறை விலைக்கோ விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்கும் இடத்தில் அன்னாருக்குப் பின்வரும் விபரங்களைக் குறிக்கும் பற்றுச்சீட்டொன்றைக் கொடுக்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற நெல்லின் தொகை ;
(இ) விற்ற நெல்லுக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) விற்பனையின் விபரம் அதாவது சில்லறை விற்பனையா அல்லது மொத்த விற்பனையா என்பது.

1960 ம் ஆண்டு யூன் மாதம் 29 ம் திகதி முற்பகல் 11 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

பி. செல்வரத்தினம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
வவுனியா.

முதலாம் அட்டவணை

| இல. | பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>ஆகக்கூடிய 96 சேர் நெல்லின் மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>ஆகக்கூடிய ஒரு சேர் நெல்லின் சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (தமிழ்) (அ) பிரிவுக்குச் சேர்ந்த வவுனியா, நெளுக்குளம் கிராம விதானையின் பகுதி | 13 1 | 0 14 |
| | (ஆ) ஆண்டியாபுளியங்குளம் சூடுவெந்தபுலவு முதலியாகுளம் செட்டிகுளம் புதுக்குளம் இராசேந்திரன்குளம் ஒமந்தை கிராமவிதானையின் பகுதிகள் | 13 1 | 0 14½ |
| 2. | வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பிரிவுக்கு (அ) சேர்ந்த மடுக்கந்தை ஈரப்பெரியகுளம் கிராமவிதானையின் பகுதி | 13 1 | 0 14 |
| | (ஆ) உலுக்குளம் மாமடுவிதானையின் பகுதி | 13 1 | 0 14½ |
| 3. | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக (அ) இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த முல்லைத் தீவு, தண்ணியூற்று கிராமவிதானையின் பகுதி | 13 86 | 0 15 |
| | (ஆ) முள்ளியவளை கிராமவிதானையின் பகுதி | 13 86 | 0 15½ |
| 4. | வவுனியா வடக்கு இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த தண்டுவான், நெடுங்கேணி, பரந்தன், கச்சிலமடு, மாங்குளம், புளியங்குளம், கனகராயன்குளம் கிராம விதானையின் பகுதிகள் | 14 10 | 0 15½ |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.